1982 மார்ச் 2]

சேஷசாயி பேப்பர் ஆலைக்கு மூங்கில் வழங்குவதற்கான ஒப்பந்தம்.

*வினா எண். 307— திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேஷசாயி பேப்பர் ஆலைக்கு எத்தனை ஆண்டுகளுக்கு மூங்கில் சப்ளை செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?

(ஆ) ஒரு டன் மூங்கிலின் விலை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 1982—83 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனத்துடன் 9 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் செய்து, மூங்கில் வழங்க அரசு இசைவு அளித்துள்ளது.

(ஆ) 1—4—1980-லிருந்து 31—3—1981 வரை—டன் ஒன்றுக்கு ரூ. 22 + நிர்வாகச் செலவு 5 சதவிகிதம்.

1—4—1981-லிருந்து 31—3—1982 வரை—ரூ. 25 + நிர்வாகச் செலவு 5 சதவிகிதம்.

1982—83 ஆம் ஆண்டிலிருந்து விலை மறுபரிசீலனை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் மூங்கில் கட்டைகளை இப்போது அரசாங்கத்திடம் இருந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. இவர்களுக்கு இது போதாத காரணத்தால் அரசாங்கத்திடம் இருந்து பெற்று ஒரு 500 ஏக்கர் அல்லது 1,000 ஏக்கர் நிலத்திலே தனியாக அவர்களே பயிரிட வேண்டும் என்பதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆண்டு தோறும் இந்த நிறுவனத்திற்குத் தேவையான மரங்களை வழங்குவதிலே அரசாங்கத்திற்கு சில சிக்கல்கள் இருக்கின்றன. அவர்களுக்குத் தேவையான அளவுக்கு மரங்களை நம்மால் வழங்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்கு சில நிலங்களை நாம் ஒதுக்கித் தந்தால் அவர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே மரங்களை வளர்த்துக்கொள்வதாகவும் அரசாங்கத்திற்கு குத்தகைத் தொகையாக ரூபாய் தந்துவிடுவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இதைப்போன்ற திட்டம் ஆந்திரா மாநில அரசாலே முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. அது இப்போது நடைமுறையிலே இருக்கின்றதா இல்லையா

என்பதைப் பற்றி எல்லாம் தகவல்களை அந்த அரசாங்கத்திடம் இருந்து பெற வேண்டும் என்று வனத்துறைக்குத் தெரிவித்திருக்கிறோம். ஆகவே அந்த விவரங்கள் நமக்குக் கிடைத்ததற்குப் பிறகுதான் அதனுடைய பலன்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து முடிவு செய்ய இயலும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது ஒரு டன் ரூபாய் 22 என்றும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் ஒரு டன் 25 ரூபாய் என்றும் சொன்னார்கள். அந்த சேஷசாயி பேப்பர் ஆலை நல்ல வருமானம் வரக்கூடிய ஒரு நிறுவனம். அப்படிப்பட்ட நிறுவனத்திற்கு அரசாங்கக் காடுகளில் இருந்து பெறக்கூடிய மரத்தை மலிவான விலைக்குக் கொடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் குறைகின்றது. வேறு நல்ல காரியங்களுக்குச் செலவழிப்பதற்குப் பணம் கிடைக்கின்ற வாய்ப்பினை இழக்கின்ற நிலைமை அதனால் ஏற்படுகின்றது. ஆகவே அந்த மரத்தின் விலையினை நியாயமான அளவுக்கு உயர்த்தி அதன்படி அந்த ஆலைக்குக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப் போல ஒரு நல்ல நிறுவனமாக அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நல்ல நிறுவனமாக இருக்கின்ற நிலைமையை மாற்றிவிடக் கூடாது என்பதிலே அரசு அக்கறை செலுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த நிறுவனத்திலே தமிழக அரசினுடைய பங்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆக அந்த நிறுவனத்தின் மொத்த மூலதனத்தில் 28·57 சதவீதம் நம்முடைய பங்காக இருக்கின்றது. அதற்காக ஆண்டுதோறும் நிச்சயமாக 18 இலட்சம் ரூபாய் நமக்கு லாபப் பங்கீடு வந்து கொண்டிருக்கின்றது. பல துறைகளில் அரசாங்கத்தின் பணம் முதலீடு செய்யப்பட்டு அந்த முதல் எங்கே இருக்கின்றது என்று கூட தேடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் தமிழகத்திலே ஒரு நல்ல ஆலை தமிழக அரசினுடைய உதவியோடு இந்தியாவிலே புகழ் பெற்ற ஆலையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தவிர மத்திய அரசினுடைய பொருளாதார நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றுக்கு இதிலே சுமார் 27 சதவீதம் பங்குகள் இருக்கின்றன. சுமார் 55 சதவீதப் பங்குகள் அரசுத் துறையினிடத்திலேயும் பொதுத்துறையினிடத்திலும் இருக்கின்றது. சுமார் 45 சதவீதம் பங்குகளை சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதில் மிகப் பெரிய லாபம் வருகின்றது என்று சொல்வதை கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். மிகப் பெரிய லாபத்தை அடையவில்லை, மிகப் பெரிய பெயரை அடைந்து

1982 மார்ச் 2]

கொண்டிருக்கின்றது. 35,000 டன் காகித உற்பத்தி செய்து கொண்டிருந்த அந்த நிறுவனம் இப்போது விரிவாக்கம் செய்யப் பட்டு 50,000 டன் காகித உற்பத்தி செய்கின்றது. 15 கோடி ரூபாய்க்கு மேலே கடன் வாங்கி இந்த ஆலையை விஸ்தரிப்பு செய்திருக்கின்ற காரணத்தாலே மேலும் 15,000 டன் உற்பத்தி ஆகின்றது என்கின்றபோது அதன் மூலம் பல்வேறு வகைகளில் தமிழக அரசுக்கு வருவாய் இருக்கின்றது. தொழிலாளர் களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே 22 ரூபாய்க்கு கொடுத்து இன்னொரு பக்கத் திலே ஒரு டன் பேப்பரை அந்த நிறுவனம் தயாரித்து அதன் மூலம் 540 ரூபாயை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த அடிப்படைகளை யெல்லாம் மனதில் வைத்துத் தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது வருகிற ஆண்டிலிருந்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் விலையை நீடிக்காமல் வைத்திருக் கிறோம்.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலை கிடைக்க அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 308—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை அவர்கள் நல்ல விலைக்கு விற்க இந்த அரசு என்ன நடவடிக்கைகள் மேற் கொண்டுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பொருள் விற்பனைச் சட்டத்தின் கீழ் விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டு உற்பத்தி செய்கின்ற பொருள்களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க தகுந்த நட வடிக்கை அரசு எடுத்திருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நியாயமான நல்ல விலை கிடைக்க தற்போது ஒவ்வொரு வட்டத்திலும் தாலுக்காவிற்கு ஒன்று என்ற வீதத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி யார்டு இருக்கிறது. அந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளை ஒவ் வொரு ஒன்றியத்திற்கும் ஒன்றாக அமைக்க அரசு ஆணை பிறப் பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.